[1982 மார்ச் 2

சென்னையில் யுனானி மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

*வினா எண். 314—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஒரு யுனானி வைத்திய முறைக் கல்லூரி அமைக்க அரசு அனுமதியளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் திட்டமென்ன?

(இ) அதற்கு ஆகும் செலவு எவ்வளவு?

(ஈ) அக்கல்லூரியை அமைத்து நடத்துவது அரசுத் துறையா? தனியார் துறையா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) பி.யு.எம்.எஸ். என்னும் யுனானி மருத்துவப் பட்டப் படிப்பு நடத்துவது அதன் திட்டமாகும்.

(இ) தற்போது இதற்காகும் ஆண்டுச் செலவு சுமார் ரூபாய் 37,000.

(ஈ) அக்கல்லூரியை நடத்துவது அரசுத் துறையாகும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நமது உள் நாட்டில் இருக்கும்படியான அலோபதி அல்லாத இதர மருத்துவ முறைகளில் அபிவிருத்தி காண்பதற்கு வேண்டி, இதுவரைக்கும் இம் மாதிரியான யுனானி வைத்தியக் கல்லூரி இல்லாததால், இப்படிப்பட்ட ஒரு கல்லூரியை அரசுத் துறையில் ஏன் அமைக்கக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு பதில் அளிக்கின்ற போது, இக் கல்லூரியை நடத்துவது அரசுத் துறையாகும் என்று நான் பதில் சொல்லி இருக்கிறேன். ஆகவே, இரண்டு ஆண்டுக்கு பிரி டெக் கோர்ஸ் என்று அதற்கு புதுமுக வகுப்பு மாதிரி பி.யு.எம்.எஸ். என்கிற அந்தப் பட்டப் படிப்பை இரண்டு ஆண்டுகளுக்கு எடுத்திருக்கிறோம். அந்த மாணவர்களில் இப்போது ஆண்களைப் பொறுத்த வரையில் ஆர்ட்ஸ் கல்லூரியிலும், பெண்களைப் பொறுத்த வரையில் எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியிலும் படித்துக்கொண்டு வருகிறார்கள் ஆகவே, இந்த பிரி டெக் கோர்ஸ் முடிந்து, உடனடியாக அவர்கள் அரசாங்கத் துறையிலே எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

1982 மார்ச் 2]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கல்லூரியை தனியார் துறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று அரசுக்கு யாராவது விண்ணப்பித்திருக்கிறார்களா? அப்படி விண்ணப்பித்திருந்தால், அவர்களுக்கு அந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குவது குறித்து அரசு ஏதேனும் யோசனை செய்து வைத்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈஸ்ட்டர்ன் மெடிகல் அசோசியேஷன் என்று இங்கே சென்னையில் உள்ள அசோசியேஷன் சார்பாக விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு அவர்கள் கொஞ்சம் பணம் கொடுப்பதாகச் சொன்னார்கள். நாம் அதற்காக, மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்க அதற்கான ஏற்பாடுகள் செய்து, இப்போது அந்த இடத்தை நிர்ணயித்திருக்கிறோம். கட்டிடத்தை கட்டி முடிப்பதாக இருக்கிறோம். அதற்கிடையே, தாமதம் ஏற்படாமல் இருப்பதற்காக, தற்காலிகமாக ஒரு கட்டிடத்தை எடுத்து நடத்திக்கொண்டு வருகிறோம்.

திரு எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, மாணவர்கள் படித்து வருகிறார்கள் என்றார்கள். எத்தனை மாணவகள் படிக்கிறார்கள்? அவர்களுக்கு உண்டாகும் செலவு என்ன? அவர்கள் இப்போது வேறு இடங்களில் படிப்பை மேற்கொண்டு வருவதால், அவர்களுக்கு இடவசதி செய்வதற்கு அரசாங்கம் எவ்வளவு ரூபாய் செலவிடுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும் போது இதற்காக ரூபாய் 37,000 செலவாகிறது என்று சொன்னேன். 1979/80 ஆம் ஆண்டில் 15 மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அதற்காக, Pre-Dip. Course has been conduc.ed at New college and S.I.E.T. college for men and women s udents respec ively. இந்த 15 மாணவர்களில் 10 பேர்களுக்கு மாதம் ரூபாய் 75 வீதம் ஸ்டைபண்டு கொடுக்கப்படுகிறது. அதிலே முதல் பேட்ச் பாஸ் செய்து வந்திருக்கிறார்கள். அவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இரண்டாவது பாட்ச் தயாராக இருக்கிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அலோபதி மருந்துகள் அதிகமான விலையில் விற்கப்படுகின்ற சூழ்நிலை இருப்பதால், இத்தகைய மருத்துவ முறைகளை அபிவிருத்தி செய்கின்ற வகையில், இதே போன்று சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யுனானி வைத்தியம் போன்ற துறைகளில், அதற்கான மருத்துவக் கல்லூரிகளை மாவட்டத்திற்கு ஒன்றாக அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

[1982 மார்ச் 2

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிறைய பணத்தை 37,000 ரூபாய் ரெக்கரிங்காக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மூலச் செலவு 8.18 இலட்சம் ரூபாய். இவ்வாறு இந்த செலவு. களை எல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல இப் போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூட சித்த வைத்திய பிரிவை ஏற்படுத்தி, ஒரு டாக்டரை நியமித்து உத்திரவு போட்டு விட்டோம். பல டாக்டர்கள் சேர்ந்து விட்டார்கள். அந்த மருத்துவமனையில் தமிழ் வைத்தியம் கொடுக்கப்படும். ஆகவே எல்லோரும் ஆங்கில வைத்திய முறைகளையே கடைப்பிடிக்க வேண்டுமென்ற கொள்கை இல்லை. எல்லாப் பிரிவுகளையும் ஊக்கப்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவ மனை.

*வினா எண். 315—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை நட்டத்தில் செயல் பட்டு வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிவர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை எண். 673, சுகாதாரம், நாள் 22, ஏப்ரல் 1981-இல் அரசு செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை செயல்பட அரசு மானியமாக அளிக்கப் பட்டு வந்த தொகை ரூபாய் 58,000—த்தை ரூபாய் 1 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதி செங்கிப்பட்டி மகாத்மாகாந்தி நினைவு காசநோய் மருத்துவமனைக்கு தனியார்களால் நஞ்சை நிலங்கள் ஏராளமாக கொடுக்கப்பட்டு, இதற்காக நிர்வகிப்பதற்கு கலெக்டர் அவர்கள் தலைமையில் கமிட்டி ஒன்று இருக்கிறது. அப்படியிருந்தும் இந்த நிறுவனம் நட்டத்தில் நடைபெறுவதற்கு காரணம் என்ன? எத்தனை ஏக்கர் நிலங்கள் நன்கொடையாக கொடுக்கப்பட்டிருக்கிறது?